

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 348 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 12 – திங்கள்கிழமை 28 ஜூலை 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 348 : Thiruvalluvar Year - 2056 - Aadi 12 - Monday 28 July 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து

# பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை மனு!

## அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் வழங்கினார்!



தமிழ்நாட்டிற்கு வருகை தரும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து மனு அளித்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.7.2025) தலைமைச் செயலாளர் நா.முருகானந்தமிடம் ஆலோசனை மேற்கொண்டு, கோரிக்கை மனுவிற்கு ஒப்புதல் அளித்தார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் முதலமைச்சரின் செயலாளர்கள் உடனிருந்தனர்.

**சென்னை, ஜூலை 28 -**

**தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் குறித்து பிரதமர் மோடி அவர்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கை மனு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் மூலமாக வழங்கப்பட்டது.**

இரண்டு நாள் பயணமாக நேற்று தமிழகம் வருகைதந்த பிரதமர் மோடி அவர்கள், புதுப்பிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி விமான நிலையத்தை திறந்து வைத்தார்.

பின்னர், திருச்சி சென்று தங்கிய பிரதமர், அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் நடக்கும் ஆடி திருவாதிரை விழாவில் பங்கேற்றார். இதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தென்மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் சர்வதேச தரத்துக்கு இணையாக ரூ.381 கோடி செலவில் தூத்துக்குடி விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதை நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு பிரதமர் மோடி அவர்கள் திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார். இதற்காக மாலத்தீவி லிருந்து தனி விமானத்தில் தூத்துக்குடி விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமர் மோடி அவர்கள் விமான நிலையத்தை திறந்து வைத்து அங்கு உருவாக்கப்பட்டுள்ள வசதிகளை பார்வையிட்டார்.

பின்னர் விமான நிலையத்தின் முன்புறம் அமைக்கப்பட்டுள்ள விழாப் பந்தலில், ரூ.4,500 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்.

விழா முடிந்ததும், பிரதமர் மோடி அவர்கள் அங்கிருந்து விமானத்தில் புறப்பட்டு நேற்று முன்தினம் இரவு 10.35 மணியளவில் திருச்சி விமான நிலையம் வந்தடைந்தார். தொடர்ந்து, சாலை மார்க்கமாகச் சென்ற அவர், மத்திய பேருந்து நிலையம் அருகே ராஜா காலனி கலெக்டர் அலுவலக சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் இரவு தங்கி ஓய்வெடுத்தார். நேற்று காலை 11.00 மணிக்கு ஹெலிகாப்டரில் புறப்பட்டு 12.00 மணியளவில் அரியலூர் மாவட்டம், கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வந்தார்.

அங்கு சிற்பங்களையும், தொல்லியல் துறை சார்பில் அமைக்கப்படும் புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டார். தொடர்ந்து, அங்கு நடைபெறும் ஆடி திருவாதிரை விழாவில், ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தை பிரதமர் வெளியிட்டார்.

பின்னர் இசையமைப்பாளர் இளையராஜாவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இசை நிகழ்ச்சியைக் கண்டுகளித்த பிரதமர், மதியம் ஹெலிகாப்டரில் புறப்பட்டு திருச்சிக்குச் செல்கிறார். அங்கிருந்து 2.30 மணியளவில் சிறப்பு விமானம் மூலம் டெல்லிக்கு புறப்படுகிறார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டிருந்த செய்திக் குறிப்பு விவரம் வருமாறு:-

**பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அரியலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு வருகை தரும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம், தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து கோரிக்கை மனு அளித்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.7.2025) தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் அவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.**

**பின்னர், தமிழ்நாட்டின் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து அளிக்கப்பட வேண்டிய கோரிக்கை மனுவிற்கு ஒப்புதல் அளித்தார்.**

**இந்த மனுவினை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பிரதமர் அவர்களிடம் அளித்தார்.**

**இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் முதலமைச்சரின் செயலாளர்கள் உடனிருந்தனர்.**

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் இந்தியப் பிரதமர் அவர்களிடம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்த கோரிக்கை மனு அளிப்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மருத்துவமனையில் இருப்பதால், தமிழ்நாட்டிற்கு வரும் பிரதமர் அவர்களிடம் வழங்கவுள்ள கோரிக்கைகள் அடங்கிய மனுவைத் தலைமைச் செயலாளர் மூலமாகக் கொடுத்து அனுப்பியுள்ளேன்.**

**நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பிரதமர் அவர்களிடம் வழங்குவார்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## தென்னிந்தியர்களின் சாதனைகள் வரலாற்றுப் புத்தகங்களில் மறைக்கப்பட்டுள்ளது!

# கீழடி அகழாய்வு முடிவு குறித்து உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கட்ஜு வேதனை!

*புதுடெல்லி, ஜூலை 28 -*

*தென்னிந்தியர்களின் சாதனைகள் வரலாற்று புத்தகங்களில் மறைக்கப்பட்டுள்ளதாக கீழடி அகழாய்வு முடிவுகளை குறிப்பிட்டு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு வேதனை தெரிவித்துள்ளார்.*



*உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்த மார்க்கண்டேய கட்ஜு தனது சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இந்திய வரலாறு குறித்த புத்தகங்கள் பெரும்பாலும் வட இந்தியாவை மையமாகக் கொண்டவையாக இருப்பதாகவும், அவற்றில் தென்னிந்தியர்களின் சாதனைகள் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.*

*தமிழ்நாட்டின் மதுரை அருகே உள்ள கீழடி என்ற இடத்தில் தொல்பொருள் கண்டுபிடிப்புகள், கி.மு. 8 ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முந்தைய பண்டைய நகர்ப்புற நாகரிகம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*தென்னிந்தியாவில் காணப்படும் அதிக எண்ணிக்கையிலான ரோமானிய நாணயங்கள், கி.மு. 27 முதல் கி.பி. 14 வரை ஆட்சி செய்த ரோமானிய மாமன்னர் அகஸ்டஸ் காலத்தில் இருந்தே, தென்னிந்தியாவிற்கும், பண்டைய ரோமுக்கும் இடையிலான விரிவான வர்த்தகத்தைக் காட்டுவதாகவும், பண்டைய மற்றும் இடைக்கால தென்னிந்தியாவில் பொருளாதாரத்தின் உயர் வளர்ச்சியைக் குறிப்பதாகவும் கூறியுள்ள மார்க்கண்டேய கட்ஜு, கீழடியில் கூட பல ரோமானிய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*தென்னிந்தியர்கள், வட இந்தியர்களைப் போல் அல்லாமல், தென்கிழக்கு ஆசியாவில் விரிவான வணிக தொடர்புகளைக் கொண்டவர்களாக இருந்தனர் என்றும், உண்மையான ஒருமைப்பாட்டை விரும்பினால், வட இந்தியர்கள் தென்னிந்தியாவின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் இலக்கியங்களை படித்து, தென்னிந்தியர்களுக்கு உரிய மரியாதையை வழங்க வேண்டும் என முன்னாள் நீதிபதி கட்ஜு குறிப்பிட்டுள்ளார்.*

---

## அமெரிக்காவின் பாகிஸ்தான் ஆதரவு நிலை!

# இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தோல்வியடைந்துவிட்டது!

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூலை 28 -*

*அமெரிக்காவின் பாகிஸ்தான் ஆதரவு நிலைப்பாட்டை சுட்டிக்காட்டி உள்ள காங்கிரஸ் கட்சி, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தோல்வி அடைந்துவிட்டதாக குற்றம்சாட்டி உள்ளது.*

*காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஆப்ரேசன் சிந்தூரை தாம் நிறுத்தியதாக 25ஆவது முறையாக அதிபர் டிரம்ப் கூறியதை சுட்டிக்காட்டி உள்ளார்.*

*சண்டையை நிறுத்தாவிட்டால், தங்களுடனான வர்த்தக ஒப்பந்தம் கிடையாது என 2025மே 10ஆம் தேதி டிரம்ப் கூறியதை சுட்டிக்காட்டி உள்ள ஜெய்ராம் ரமேஷ், அமெரிக்காவின் சென்ட்ரல் கமாண்ட் மைக்கேல் குரில்லா, தீவிரவாதத்தை ஒடுக்கும் அமெரிக்காவின் நடவடிக்கையில் பாகிஸ்தான் முக்கிய பங்காற்றுவதாக தெரிவித்ததை சுட்டிக்காட்டி உள்ளார்.*

*பாகிஸ்தான் ராணுவ தளபதி அஷிம் முனீரை வெள்ளை மாளிகைக்கு அழைத்து, அதிபர் டிரம்ப் விருந்து கொடுத்ததை சுட்டிக்காட்டி உள்ள ஜெய்ராம் ரமேஷ்,*

*பஹல்காம் தாக்குதலுக்கு 2 மாதங்கள் முன்பு, வன்முறை மற்றும் வகுப்புவாதத்தை தூண்டும் வகையில் பேசிய அஷிம் முனீரை அழைத்து டிரம்ப் உபசரித்ததை சுட்டிக்காட்டி உள்ளார்.*

*சனிக்கிழமை பாகிஸ்தான் துணைப் பிரதமரை, அமெரிக்காவின் செயலாளர் மார்கோ ரூபியோ சந்தித்ததையும் இவை அனைத்தும் வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவின் தோல்வி என்றும் ஜெய்ராம் ரமேஷ் சாடி உள்ளார்.*

---

# கீழடி அகழாய்வு: அனைத்து விவரங்களும் வழங்கப்பட்டு விட்டது!

## தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தகவல்!

*புதுடெல்லி, ஜூலை 28 -*

*கீழடி அகழாய்வு குறித்து ஒன்றிய தொல்லியல் துறை கேட்ட அனைத்து விபரங்களும் வழங்கப்பட்டு விட்டது என்று தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.*



*டெல்லியில் நடைபெற்ற, உச்சநீதிமன்ற தமிழ் வழக்கறிஞர்கள் சங்க இலக்கிய கழக நிகழ்ச்சியில், கீழடி அகழ்வாராய்ச்சி முன்னாள் திட்ட இயக்குநர் அமர்நாத் ராமகிருஷ்ணன் பங்கேற்று, கீழடி மூலம் அறியப்படும் தமிழர் தொன்மை என்ற தலைப்பில் உரையாற்றினார்.*

*சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதிகள் டி.ராஜா, கற்பக விநாயகம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமர்நாத் ராமகிருஷ்ணன், கீழடி அகழாய்வு குறித்து ஒன்றிய தொல்லியல் துறை கேட்ட அனைத்து விபரங்களும் வழங்கப்பட்டு விட்டதாக தெரிவித்தார்.*

*கீழடி ஆய்வு முடிவுகளை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக வெளியிட்டால், அது பல தொடர் ஆய்வுகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் கூறினார்.*